**சுருக்கம்**

சென்னை மாநகராட்சி – வார்டு–68 ல் புல்லா அவின்யூவில் உள்ள காலியிடத்தில் மண்டலம் 5க்கு நவீன அலுவலகம் கட்டும் பணி – திட்ட மதிப்பீடு ரூ.525.00 இலட்சங்களுக்கு அரசின் ஆட்சி முறை ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை

அரசாணை (நிலை) எண்:82 நாள்:- 21.05.2008

வைகாசி – 8,
திருவள்ளுவர்

ஆண்டு – 2039,

படிக்கவும்:-

சென்னை மாநகராட்சி கடித எண்.க.து.ந.க.எண். பி5/565/2008, நாள் 26.03.2008

☯☯☯

**ஆணை:–**

சென்னை மாநகராட்சி ஆணையர் தனது கடிதத்தில் சென்னை மாநகராட்சி அலுவலகங்களின் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் பொருட்டு மண்டல மற்றும் வார்டு அலுவலகங்களை நவீன வசதிகளுடன் படிப்படியாக மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டு உள்ளது என்றும், இதன்படி, முதற் கட்டமாக, வட சென்னையில் நவீன மண்டல அலுவலகமும், தென் சென்னையில் நவீன மண்டல அலுவலகமும் கட்டும் பொருட்டு நில அளவை (Survey) செய்ததில், மத்திய சென்னையில் வார்டு –68 ல் புல்லா அவின்யூவில் உள்ள மாநகராட்சி இடம் மண்டல அலுவலகம் – 5 க்கு கட்டிடம் கட்டுவதற்கு உகந்ததாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட திட்டப்பணிக்கு திருவாளர்.ஏ.செல்வராஜ் கட்டிட எழில் கலைஞர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட வடிவமைப்பு பலமுறை கலந்தாலோசித்தப்பிறகு சில திருத்தங்களுடன் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றும், இக்கட்டடம் தரைதளம் + 5 தளங்கள் கட்டுவதற்கு ஏதுவாக வடிவமைப்பு செய்யப்பட்டு தற்போது தரைதளம் + முதல்தளம் + இரண்டாம் தளம்கட்ட உத்தேசிக்கப்பட்டு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், தரைதளம், முதல் மற்றும் இரண்டாம் தளம் ஒவ்வொன்றின் கட்டட பரப்பளவு 1535.00 சதுர மீட்டர் (16517.00 சதுர அடி) ஆகும் என்றும், இந்த நவீன கட்டடத்தில் வார்டு குழு தலைவர் அலுவலகம், மண்டல அலுவலர் அறை, செயற்பொறியாளர் அறைகள், வருவாய் துறை, சுகாதார துறை, மின் துறை மற்றும் இணையதள சேவை போன்ற தேவையான அலுவலகங்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார். மேலும் இத்திட்டப்பணிக்கு பொதுப்பணித்துறையின் சுற்றறிக்கை எண்.HDO(A)/48518/2003, நாள் 07.05.2007 ல்

தெரிவித்துள்ளவாறு 2007–2008 ஆம் ஆண்டின் கட்டட பரப்பளவின் விலைவிகித அடிப்படையில் தோராய திட்ட மதிப்பீடு ரூ.525.00 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ளது என்றும், இதற்கான செலவு மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட உள்ளது என்றும், இதற்கு மன்றத்தின் அனுமதி தீர்மானம் எண்.92/2008 நாள் 29.02.2008 மூலம் பெறப்பட்டுள்ளது என்றும் ஆணையர் கூறியுள்ளார்.

2. எனவே, மேற்கண்ட திட்டப்பணிக்கு 2007–2008 ஆம் ஆண்டிற்கான பொதுப்பணித்துறை நிர்ணயித்துள்ள விலைவிகித அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ள தோராய திட்ட மதிப்பீடு ரூ.525.00 இலட்சங்களுக்கு அரசின் நிர்வாக அனுமதி அளிக்குமாறு சென்னை மாநகராட்சி ஆணையர் ஆணையர் கோரியுள்ளார்.

3. சென்னை மாநகராட்சி ஆணையரின் கருத்துருவை நன்கு பரிசீலித்த அரசு அதனை ஏற்றுக் கொள்ளத் தீர்மானித்து. சென்னை மாநகராட்சி மண்டலம் 5க்கு புல்லா அவின்யூவில் உள்ள மாநகராட்சி இடத்தில் சென்னை மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து நவீன அலுவலகம் கட்டும் பணிக்காக 2007–2008 ஆண்டு பொதுப்பணித்துறை விலை விகிதப்படி தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீடு ரூ.525 லட்சத்திற்கு அரசின் ஆட்சி முறை ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. (நிதித்துறை அ.சா.கு. எண்.1439/நி.செ./ப்பி/2008, நாள் 13.05.2008

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,

அரசுச் செயலாளர்.

பெறுநர் :
ஆணையாளர், சென்னை மாநகராட்சி, சென்னை –3
மாநில கணக்காயர், சென்னை – 18/35
இயக்குநர், உள்ளாட்சித் நிதி தணிக்கைகள், சென்னை – 108

<u>நகல் :</u>
நிதித்துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2), சென்னை – 9.
இ.கோ./உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.